செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் ஒன்றியத்திற்குட்பட்ட கேளம்பாக்கம் ஊராட்சியில் 2வது கட்டமாக ஊரக பகுதிகளுக்கான, 'மக்களுடன் முதல்வர்' திட்ட முகாமில், பட்டா, குடும்ப அட்டை, தையல் இயந்திரம், உடற்பயிற்ச்சி கூடத்திற்கான கடனுதவி சார்ந்த 47 பயனாளிகளுக்கு 20.12 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சியர் அருண்ராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, ஒன்றிய குழு தலைவர் எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், தலைமை செயற்குழு உறுப்பினர் அன்புச் செழியன், ஒன்றிய செயலாளர் பையனூர் சேகர், ஊராட்சி மன்ற தலைவர் ராணி எல்லப்பன் மற்றும் அரசு அதிகாரிகள் உட்பட பலர் கலந்துக்கொண்டனர்.

சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழக அரங்கில் நேற்று (11.07.2024) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில், சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டுக்கான நூலாசிரியர்கள் மற்றும் பதிப்பகத்தாருக்கு பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் இல.சுப்பிரமணியன், தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் எஸ்.சௌமியா, தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விக்கிரவாண்டி இடைத்தேர்தல் :

ஸ்ட்ராங் ரூமிற்கு சீல் - 3 அடுக்கு பாதுகாப்பு!

விக்கிரவாண்டி, ஜூலை 12 -

விக்கிரவாண்டி தொகுதி எம்.எல்.ஏ.வாக இருந்த புகழேந்தி கடந்த ஏப்ரல் 6ந்தேதி மரணமடைந்தார். இதனை தொடர்ந்து காலியாக அறிவிக்கப்பட்ட விக்கிரவாண்டி தொகுதிக்கான இடைத்தேர்தல் நேற்று நடைபெற்றது.

இதில் தி.மு.க. சார்பில் அன்னியூர் சிவா, பா.ம.க. சார்பில் சி.அன்புமணி, நாம் தமிழர் கட்சி சார்பில் டாக்டர் அபிடுயா உள்ளிட்ட 29 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இத்தொகுதியில் இருந்த 2 லட்சத்து 37 ஆயிரத்து 31 வாக்காளர்களுக்காக 276 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டி ருந்தது.

நேற்று முன்தினம் காலை வாக்குப்பதிவு தொடங்கியதில் இருந்து விறுவிறுப்பாக நடைபெற்ற தேர்தலில் 82.18 சதவித வாக்குகள் பதிவாயின.

இதற்கு பயன்படுத்தப்பட்ட வாக்குப்பதிவு எந்திரங்கள் பனையபுரத்தில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள ஸ்ட்ராங் ரூமிற்கு கொண்டு வரப்பட்டது.

இந்த நிலையில் ஸ்ட்ராங் ரூமிற்கு நேற்று காலை 11.45 மணிக்கு சில் வைக்கப்பட்டது.

தேர்தல் பொது பார்வையாளர் அமித் சிங் பன்சால், மாவட்ட கலெக்டர் பழனி, போலீஸ் சூப்பி ரண்டு தீபக் சிவாச், தேர்தல் நடத்தும் அலுவலர் சந்திரசேகர், தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவா, பா.ம.க. மாவட்ட தலைவர் பழனிவேல், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் யுவராஜ் ஆகியோர் முன்னிலையில் சீல் வைக்கப்பட்டது.

தொடர்ந்து பில் வைக்கப்பட்ட ஸ்ட்ராங் ரூமிற்கு 3 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து நாளை வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது.

திருவான்மியூர், பாம்பன் குமரகுருதாசர் திருக்கோயில்

குடமுழுக்குக்கு தடை கோரிய மனு தள்ளுபடி!

உச்சநீதிமன்றம் உத்தரவு!

சென்னை, ஜூலை 12

சென்னை, திருவான்மியூர், மயூரபுரம், பாம்பன் குமரகுருதாசர் திருக்கோயில் சர்வே எண்.172/2ல் 3 ஏக்கர் 11 சென்ட் பரப்பளவில் அமைந்துள்ளது. இந்த சொத்தும், இதில் அமைந்துள்ள திருக்கோயிலும் நிர்வகிக்க பாம்பன் சுவாமிகள், தமது உயிலில் தேஜோ மண்டல் சபா என்ற அமைப்பினை ஏற்படுத்தியிருந்தார். அதன் சார்பில் காரியதரிசி டி.டி.குப்புசாமி செட்டியார் என்பவரால் 09.09.1984 அன்று தாமாக முன் வந்து இந்து சமய அறநிலையத்துறை வசம் திருக்கோயில் ஒப்படைக்கப்பட்டு அன்று முதல் தொடர்ச்சியாக நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

1985ஆம் ஆண்டு முதல் மகா தேஜோ மண்டலத்தாரால் (மூன்று மண்டலத்தார்கள்) இது திருக்கோயில் அல்ல சமாதி என விளம்புகை செய்திட பல்வேறு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. சென்னை உயர்நீதிமன்ற இரு நீதிபதிகளை கொண்ட அமர்வானது வழக்கு எண் WA.2191/2018, WA.2316/2018, WA.2390/2018 வழக்குகளின் இறுதி தீர்ப்பை 27.03.2024 அன்று வழங்கியது. இத்தீர்ப்பில் பாம்பன் குமரகுருதாசர் திருக்கோயில் எனவும் அதன் நிர்வாகம் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ளது என்பதை உறுதி செய்து வழக்கு முடித்து வைக்கப்பட்டது.

எனவே, மேற்குறிப்பிட்ட சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின்படியும், இந்து சமய அறநிலையத்துறை சட்டம் மற்றும் விதி முறைகளுக்கு உட்பட்டும் திருக்கோயில் நிர்வாகம் நடைபெறுவதற்கு ஏதுவாக ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாசர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத்துறையின் நேரடி ஆளுகையின் கீழ் கொண்டுவரப்பட்டது. இத்திருக்கோயிலுக்கு ரூ.1.12 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு 12.07.2024 அன்று குடமுழுக்கு நடத்திட முடிவு செய்யப்பட்டது.

இந்நிலையில், பாம்பன் சுவாமிகள் திருக்கோயில் குடமுழுக்கு விழாவிற்கு தடை விதிக்க கோரியும், மேற்கண்ட திருக்கோயில் மயூர வாகன சேவை திருவிழாவினை நடத்துவதற்கு எந்த சபைக்கு உரிமையுள்ளது என்பதை முடிவு செய்திட சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி இந்து சமய அறநிலையத் துறை சென்னை மண்டல இணை ஆணையரால் நடத்தப்படும் விசாரணையில் தங்களையும் அனுமதிக்கக்கோரியும், மயூரபுரம் குரு பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாசர் அன்னதான சபை சார்பாக அதன் தலைவர் டி.சரவணன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனு எண்.18185/2024, 04.07.2024 அன்று சென்னை உயர்நீதிமன்றம் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, குடமுழுக்கு விழாவிற்கு தடை விதிக்க மறுத்தும், மனுதாரர் குடமுழுக்கு விழாவில் கலந்து கொள்ளலாம் எனவும், குடமுழுக்கு விழாவில் இடையூறு ஏற்படுத்தக்கூடாது என உத்தரவிடப்பட்டது.

மேலும், மனுதாரர் சார்பில் குடமுழுக்கு விழாவில் இடையூறு ஏற்படுத்த மாட்டேன் என உறுதியளிக்கப்பட்டதை, பதிவு செய்து கொண்ட சென்னை உயர்நீதிமன்றம், குடமுழுக்கு முடிந்த 2 வாரங்களுக்கு பிறகு இணை ஆணையரால் விசாரணை தொடங்கப்பட வேண்டும் எனவும், 6 மாத காலத்திற்குள் விசாரணை முடித்து உரிய உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, மீண்டும் அதே காரணத்திற்காக சைவ சித்தாந்த பெருமன்றம் சார்பாக அதன் செயற்குழு உறுப்பினர் திரு மதி.ஜி.ஜெயகலா என்பவரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் பொது நல வழக்கு எண். 18970 / 2024 தாக்கல் செய்யப்பட்டு, 09.07.2024 மற்றும் 10.07.2024 ஆகிய நாட்களில் விசாரணைக்கு வரப்பெற்றது. குடமுழுக்கிற்கு தடை விதிக்க மறுத்து விசாரணையை நான்கு வாரகாலத்திற்கு நீதிமன்றத்தால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

பாம்பன் சுவாமிகள் சமாதியா அல்லது திருக்கோவிலா என வந்த சர்ச்சையில் மேல்முறையீடு வழக்கு எண் 2191, 2316 மற்றும் 2390 of 2018 சென்னை உயர்நீதிமன்ற இரு அமர்வு நீதிபதிகள் சுரேஷ்குமார் மற்றும் அருள்முருகன் அமர்வால் 27.03.2024 தேதியிட்ட தீர்ப்பில் பாம்பன் சுவாமிகளின் சீடர்கள் என கூறப்படும் 4 சபைகள் உள்ளது எனவும் அந்த 4 சபைகளில் எந்த சபை மயூர வாகன சேவனம் நடத்த ஏதுவாக உள்ளதென இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறையை விசாரணை செய்து முடிவெடுக்க உத்தரவிட்டது. மேலும் அறநிலையத்துறையால் பாம்பன் சுவாமி கோவிலில் நடைபெறும் அனைத்து விழாவினையும் நடத்த வேண்டும் என்று உத்தரவிட்டது.

அதனை எதிர்த்து பாம்பன் சுவாமிகள் அவர்களின் சீடர்கள் என கூறப்படும் சபையினரால் உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு இன்று (11.07.2024) அமர்வு நீதிமன்றம் நீதிபதிகள் ரிஷி கேஷ் ராய் மற்றும் எஸ்.வி.என். பட்டி அவர்களால் நிராகரிக்கப்பட்டு, சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பு சரி என்று தீர்ப்பளித்து குடமுழுக்கு நடத்த எந்தவிதமான தடையும் இல்லை என தீர்ப்பளித்தது.

இவ்வழக்கு விசாரணையின்போது மூத்த வழக்கறிஞர்கள் ஜெய்தீப் குப்தா, என்.ஆர். இளங்கோ மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அரசு சிறப்பு வழக்கறிஞர் என்.ஆர்.ஆர்.அருண் நடராஜன் ஆகியோர் ஆஜராகி வாதிட்டனர்.

'பதஞ்சலி' நிறுவனத்தின் தடை செய்யப்பட்ட 14 போலி மருந்துகள்!

தற்போதும் கடைகளில் விற்பனை செய்யப்படுவதாக குற்றச்சாட்டு!

சென்னை, ஜூலை 12 -

தடை செய்யப்பட்ட 14 போலி மருந்துகளை பாபா ராம்தேவின் பதஞ்சலி நிறுவனம் தற்போதும் தனது கடைகளில் விற்பனை செய்து வருவதாக புகார் எழுந்துள்ளது.

பல்வேறு நோய்களை 100 சதவிகிதம் குணப்படுத்துவதாக கூறி பாபா ராம்தேவின் பதஞ்சலி நிறுவனம் போலி விளம்பரங்கள் வெளியிட்டது. இதனை எதிர்த்து இந்திய மருத்துவ சங்கம் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது.

வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், பதஞ்சலி நிறுவனத்துக்கும், பாபா ராம்தேவுக்கும் கடும் கண்டனம் தெரிவித்தது. இதனையடுத்து நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகிய பாபா ராம்தேவ் பகிரங்க மன்னிப்பு கோரினார். இருப்பினும், அடுத்தடுத்த விசாரணைகளில் பாபா ராம்தேவுக்கு உச்சநீதிமன்றம் அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பி வருகிறது.

இந்நிலையில், உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை தொடர்ந்து பதஞ்சலி நிறுவனத்தின் 14 மருந்துகளை உற்பத்தி செய்ய உத்தராகண்ட் அரசு தடை விதித்தது.

இதன் பின்னர் இந்த மருந்துகளை அனைத்து கடைகளில் இருந்தும் உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. நேற்று முன் தினம் வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, நாடு முழுவதும் 5 ஆயிரத்து 600 கடைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த இந்த 14 மருந்துகளும் திரும்பப் பெறப்பட்டதாக பதஞ்சலி தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் தெரிவித்தார். ஆனால், தற்போதும் இந்த மருந்துகள் கடைகளில் விற்பனை செய்யப்பட்டு வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

டெல்லி, லக்னோ, பாட்னா, டேராடூன் ஆகிய நகரங்களில் ஆய்வு செய்ததில் தடை செய்யப்பட்ட 14 மருந்துகள் தற்போதும் விற்பனை செய்யப்பட்டு வருவது தெரிய வந்துள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் 101 வது பிறந்த நாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சரும் கழக தலைவருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சருமான சு.முத்துசாமி வழிகாட்டுதலின்படி ஈரோடு தெற்கு மாவட்ட கழக வர்த்தகர் அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் கே.எம்.ராஜசேகர், ஏற்பாட்டில் முத்துகவுண்டன் பாளையம் மரிய நிவாஸ் முதியோர் இல்லத்தில் உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. நிகழ்வில் மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம் பொதுக்குழு உறுப்பினர் ஆர்.பொன்னுசாமி, மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் ஆர்.பி.பாலு, மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் ஜாகிர் உசேன், சின்னியம்பாளையம் செல்வகுமார், மாமன்ற உறுப்பினர் தண்டபாணி, மாநகர வர்த்தக அணி அமைப்பாளர் ஆர்.வெங்கடேஸ்வரன், மாவட்ட வர்த்தக அணி நிர்வாகிகள் கே.முத்துசாமி, ஜி.பாலுசாமி, மெஸ் பாலு, தேவேந்திரன், மணல் முருகேஷ், வினோத் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

2022ஆம் ஆண்டு தமிழில் சிறந்த நூல்களைப் படைத்த

நூலாசிரியர்கள் - பதிப்பகத்தாருக்கு பரிசு!

அமைச்சர் மு.பெ. சாமிநாதன் வழங்கினார்.

சென்னை,ஜூலை.12-

2022-ஆம் ஆண்டில் தமிழில் சிறந்த நூல்களைப் படைத்த நூலாசிரியர்கள் மற்றும் நூல்களைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் நேற்று (11.07.2024) சென்னை, இராஜா அண்ணாமலை புரம், டி. ஜி. எஸ். தினசரன் சாலை (இசைக் கல்லூரிச் சாலை)யில் உள்ள தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின் அரங்கத்தில் பரிசு வழங்கப்பட்டது.

தமிழ்மொழியில் சிறந்த நூல்கள் வெளிவருவதை ஊக்கப்படுத்தும் வகையில் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக செயற்படுத்தப்படும் சிறந்த நூல் பரிசுத் திட்டத்தின் வாயிலாக 33 வகைப்பாடுகளில் நூல்கள் பெறப்பட்டு ஒவ்வொரு நூலையும் மூன்று அறிஞர்களைக் கொண்டு மதிப்பீடு செய்து சிறந்த படைப்புகள் தெரிவு செய்யப்படுகின்றன. தெரிவு செய்யப் பெற்ற நூலை எழுதிய நூலாசிரியருக்கு ரூ.30,000/-மும் அந்நூலைப் பதிப்பித்த பதிப்பகத்திற்கு ரூ.10,000/-மும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகின்றன.

அவ்வரிசையில், 2022-ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்று சிறந்த நூல் பரிசுத் திட்டத்தின்கீழ் சிறந்த நூலாகத் தெரிவு செய்யப்பட்ட மரபுக் கவிதை எனும் வகைப் பாட்டில் இராமானுச மாமுனிவர் காவியம் எனும் நூலை எழுதிய பேரா. கரு. நாகராசன் அவர்களுக்கும் பதிப்பித்த வானதி பதிப்பகத்தாருக்கும், புதுக் கவிதை எனும் வகைப்பாட்டில் புண் உமிழ் குருதி எனும் நூலை எழுதிய முனைவர் இரா. சின்னசாமி இ.கா.ப. அவர்களுக்கும் பதிப்பித்த உயிர்மை பதிப்பகத்தாருக்கும், புதினம் எனும் வகைப்பாட்டில் குரவை எனும் நூலை எழுதிய சிவகுமார் (சிவகுமார் முத்தய்யா) அவர்களுக்கும் பதிப்பித்த யாவரும் பப்ளிஷர்ஸ் பதிப்பகத்தாருக்கும், சிறுகதை எனும் வகைப்பாட்டில் பெரிய வாய்க்கா தெரு எனும் நூலை எழுதிய ப. அன்பழகன் (பாரதி வசந்தன்) அவர்களுக்கும் பதிப்பித்த டிஸ்கவரி பப்ளிகேஷன்ஸ் பதிப்பகத்தாருக்கும், நாடகம் (உரைநடை, கவிதை) எனும் வகைப்பாட்டில் புகழ் அமுதம் 2022 எனும் நூலை எழுதிய ஞா. மாணிக்கவாசகன் அவர்களுக்கும் பதிப்பித்த உமா பதிப்பகத்தாருக்கும், சிறுவர் இலக்கியம் எனும் வகைப்பாட்டில் சிறார் நலம் தேடு எனும் நூலை எழுதிய சு. கந்தசுவாமி (மலரடியான்) அவர்களுக்கும் பதிப்பித்த லாலிபாப் சிறுவர் உலகம் பதிப்பகத்தாருக்கும், திறனாய்வு எனும் வகைப்பாட்டில் தமிழ்த்தேன் துளிகள் எனும் நூலை எழுதிய பவள சங்கரி திருநாவுக்கரசு அவர்களுக்கும் பதிப்பித்த பழனியப்பா பிரதர்ஸ் பதிப்பகத்தாருக்கும், மொழி வரலாறு, மொழியியல், மொழி வளர்ச்சி இலக்கணம் எனும் வகைப்பாட்டில் தொல்காப்பியம் பொருண்மை நோக்குப் பதிப்பு கூற்று எனும் நூலை எழுதிய முனைவர் ஆ. மணி அவர்களுக்கும் பதிப்பித்த தமிழன்னை ஆய்வகம் பதிப்பகத்தாருக்கும், பிற மொழிகளிலிருந்து தமிழாக்கம் செய்யப்படும் நூல்கள் எனும் வகைப்பாட்டில் மழலையர் கல்வி எனும் நூலை எழுதிய ஆயிஷா இரா. நடராசன் அவர்களுக்கும் பதிப்பித்த பாரதி புத்தகாலயம் பதிப்பகத்தாருக்கும், நுண் கலைகள் (இசை, ஓவியம், நடனம், சிற்பம்) எனும் வகைப்பாட்டில் திரை இசையில் தமிழிசை எனும் நூலை எழுதிய நிழல் ப. திருநாவுக்கரசு (ப. சோழநாடன்) அவர்களுக்கும் பதிப்பித்த நிழல் பதிப்பகத்தாருக்கும், அகராதி, கலைக்களஞ்சியம், கலைச் சொல்லாக்கம், ஆட்சித் தமிழ் எனும் வகைப்பாட்டில் நெலிகோலு படகு - தமிழ் - ஆங்கிலம் அகராதி எனும் நூலை எழுதிய இரா.கு. ஆல்துரை அவர்களுக்கும் பதிப்பித்த நெலிகோலு அறக்கட்டளை, நெலிகோலு வெளியீட்டகம் பதிப்பகத்தாருக்கும், பயண இலக்கியம் எனும் வகைப்பாட்டில் இதயம் கவர்ந்த இலங்கை எனும் நூலை எழுதிய பொறியாளர் கு. வெங்கடேசன் அவர்களுக்கும் பதிப்பித்த ஸ்ரீகுரு இராகவன் பப்ளிகேஷன்ஸ் பதிப்பகத்தாருக்கும், வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு எனும் வகைப்பாட்டில் சிவாஜி கணேசன் எனும் நூலை எழுதிய முனைவர் மருதுமோகன் அவர்களுக்கும் பதிப்பித்த வளரி ஸ்டுடியோஸ் பதிப்பகத்தாருக்கும், நாட்டு வரலாறு, கல்வெட்டு, தொல்லியல், கடலியலும் வணிக வழிகளும், அகழாய்வு எனும் வகைப்பாட்டில் ராஜராஜனின் கொடை எனும் நூலை எழுதிய திருமதி க. சுபாஷினி அவர்களுக்கும் பதிப்பித்த தமிழ் மரபு அறக்கட்டளை பதிப்பகத்தாருக்கும், கணிதவியல், வானியல், இயற்பியல், வேதியியல் எனும் வகைப்பாட்டில் நமது சூரியக்குடும்பமும் விண்வெளி ஆராய்ச்சி வரலாறும் எனும் நூலை எழுதிய அ. சோழராஜன் (ஆதனூர்சோழன்) அவர்களுக்கும் பதிப்பித்த சிபி பதிப்பகத்தாருக்கும், பொறியியல், தொழில் நுட்பவியல் எனும் வகைப்பாட்டில் மீன்வளம் சார்ந்த தொழில்களில் சுயவேலை வாய்ப்புகள் எனும் நூலை எழுதிய டாக்டர் ஓ. ஹென்றி ஃபிரான்சிஸ் அவர்களுக்கும் பதிப்பித்த நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பதிப்பகத்தாருக்கும், மானிடவியல், சமூகவியல், புவியியல், நிலவியல் எனும் வகைப்பாட்டில் தெய்வீக ஆறுகளும் பெருமைகளும் எனும் நூலை எழுதிய பேராசிரியர் சொ.சொ.மீ. சுந்தரம் அவர்களுக்கும் பதிப்பித்த மணிமேகலைப் பிரசுரம் பதிப்பகத்தாருக்கும், சட்டவியல், அரசியல் எனும் வகைப்பாட்டில் ஊடகச் சட்டங்கள் எனும் நூலை எழுதிய திருமதி சந்திரிகா சுப்ரமண்யன் அவர்களுக்கும் பதிப்பித்த சந்திரோதயம் பதிப்பகத்தாருக்கும், பொருளியல், வணிகவியல், மேலாண்மையியல் எனும் வகைப்பாட்டில் இயற்கையோடு இயைந்த அறிவியல் எனும் நூலை எழுதிய முனைவர் கு.வை. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும் பதிப்பித்த பாரதி புத்தகாலயப் பதிப்பகத்தாருக்கும், மருந்தியல், உடலியல், நலவியல் எனும் வகைப்பாட்டில் முதியோர் நலம் எனும் நூலை எழுதிய மருத்துவர் வி.எஸ். நடராஜன் அவர்களுக்கும் பதிப்பித்த டாக்டர். வி.எஸ். நடராஜன் நல அறக்கட்டளை பதிப்பகத்தாருக்கும், தமிழ் மருத்துவ நூல்கள் (சித்தம், ஆயுர்வேதம்) எனும் வகைப்பாட்டில் வளம் தரும் நெல்லி எனும் நூலை எழுதிய கே.எஸ். சண்முகம் அவர்களுக்கும் பதிப்பித்த நியூ செஞ்சரி புக் ஹவுஸ் (பி) லிட் பதிப்பகத்தாருக்கும், சமயம், ஆன்மிகம், அளவையியல் எனும் வகைப்பாட்டில் இராஜராஜ சோழனின் தஞ்சை பெரிய கோவில் எனும் நூலை எழுதிய எ.பி. ஜனகராஜா அவர்களுக்கும் பதிப்பித்த வானதி பதிப்பகத்தாருக்கும், கல்வியியல், உளவியல் எனும் வகைப்பாட்டில் சூப்பர் குழந்தை எனும் நூலை எழுதிய பிரகாஷ் ராஜ கோபால் அவர்களுக்கும் பதிப்பித்த சுவாசம் பதிப்பகத்தாருக்கும், வேளாண்மையியல், கால்நடையியல் எனும் வகைப்பாட்டில் செம்மை வருவாய் தரும் செம்மறியாடு எனும் நூலை எழுதிய முனைவர் க. லோகநாதசாமி அவர்களுக்கும் பதிப்பித்த கால்நடை வேளாண்மை பதிப்பகத்தாருக்கும், சுற்றுப்புறவியல் எனும் வகைப்பாட்டில் கழுகுகளின் காடு எனும் நூலை எழுதிய சு. சந்திரசேகரன் (எ) சந்துரு அவர்களுக்கும் பதிப்பித்த கிழக்குப் பதிப்பகத்தாருக்கும், கணினியியல் எனும் வகைப்பாட்டில் தாய்மொழி - சி எனும் நூலை எழுதிய மு. சிவலிங்கம் (சினேகலதா) அவர்களுக்கும் பதிப்பித்த பாரதி புத்தகாலயப் பதிப்பகத்தாருக்கும், நாட்டுப்புறவியல் எனும் வகைப்பாட்டில் மண்சார் வாழ்வியல் எனும் நூலை எழுதிய அ. பழனியப்பன் (கவிஞர் கழுகூர் பழனியப்பன்) அவர்களுக்கும் பதிப்பித்த தமிழ்ச்சங்கு பதிப்பகத்தாருக்கும், வெளிநாட்டுத் தமிழ்ப் படைப்பிலக்கியம் எனும் வகைப்பாட்டில் எண்ணப் பூக்கள் எனும் நூலை எழுதிய ஃபாசில் ஃப்ரீமேன் அலி அவர்களுக்கும் பதிப்பித்த சிபி பதிப்பகத்தாருக்கும், இதழியல், தகவல் தொடர்பு எனும் வகைப்பாட்டில் கலக்கார கலைஞர்கள் எனும் நூலை எழுதிய ச. செந்தில்குமார் (நெய்வேலி பாரதிக்குமார்) அவர்களுக்கும் பதிப்பித்த புஸ்தகா டிஜிட்டல் மீடியா பிரைவேட் லிட் பதிப்பகத்தாருக்கும், பிறசிறப்பு வெளியீடுகள் எனும் வகைப்பாட்டில் தண்ணீர் நீரலைகளும் நினைவலைகளும் எனும் நூலை எழுதிய மதுமிதா அவர்களுக்கும் பதிப்பித்த ஸ்நேகா வெளியீடு பதிப்பகத்தாருக்கும், விளையாட்டு எனும் வகைப்பாட்டில் கால்களின் தவம் தேக்வாண்டோ எனும் நூலை எழுதிய சே. லோகராஜ் (மாஸ்டர் சே. லோகராஜ்) அவர்களுக்கும் பதிப்பித்த பெ. சேகர் வெளியீடு பதிப்பகத்தாருக்கும், மகளிர் இலக்கியம் எனும் வகைப்பாட்டில் கதவு திறந்ததும் கடல் எனும் நூலை எழுதிய பிருந்தா சேது அவர்களுக்கும் பதிப்பித்த ஹெர் ஸ்டோரிஸ் பதிப்பகத்தாருக்கும், தமிழர் வாழ்வியல் எனும் வகைப்பாட்டில் புலம் பெயர் தமிழர்கள் வாழ்வு - இருப்பு - படைப்பு எனும் நூலை எழுதிய பேரா. ச. சீனிவாசன் அவர்களுக்கும் பதிப்பித்த பாலாஜி இண்டர்நேஷனல் பதிப்பகத்தாருக்கும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் அவர்களால் இன்று (11.07.2024 வியாழக் கிழமை) சென்னை, அடையாறு, இராஜா அண்ணாமலைபுரம், டி.ஜி.எஸ். தினகரன் சாலையில், உள்ள தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழக அரங்கத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் முனைவர் இல.சுப்பிரமணியன் முன்னிலையில் நடைபெற்ற விழாவில் பரிசு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ஔவை அருள், தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர். எஸ். சௌமியா தமிழ் வளர்ச்சித் துறை துணை இயக்குநர் திருமதி கு.ப.சத்யபிரியா மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பீளமேடு பகுதி3 வார்டு எண்: 51,சவுரி பாளையம்,இந்திரா நகர் பகுதிகளில், கோவை மாநகர் மாவட்ட இளைஞர் அணி சார்பில்,கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா.கார்த்திக் EX.எம்எல்ஏ., கோவை மாநகர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் இரா.தனபால், துணை அமைப்பாளர் க.மணிகண்டன் மேற்பார்வையில், பீளமேடு பகுதி3 பகுதி செயலாளர் இரா. சேரலாதன் தலைமையில்,51 வது வட்டக் கழகச் செயலாளர் க.மணிகண்டன் முன்னிலையில், இல்லந்தோறும் இளைஞர் அணிஉறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெற்றது.மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், மாநகர் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் லாரா பிரேம்தேவ்,பொதுக்குழு உறுப்பினர் நோயல் செல்வம், வட்டக் கழகச் செயலாளர் வார்டு எண்:53 ம.சிவக்குமரன்,கோவை மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் சு.தனபால், இளைஞரணி கார்த்திக், மில் தண்டபாணி, நாகராஜ், ரங்கநாதன், மகேந்திரமணி, கே.சின்னச்சாமி, ராமதாஸ், இளைஞரணிசுபாஷ், ரங்கநாதன், சதீஷ்குமார், சுரேஷ், நாகராஜ்,சேகர், பிரவீன், கணேசன், சேகர், பிரகாஷ்,பிரபு, கழக நிர்வாகிகள், இளைஞர்கள்,கழக உடன்பிறப்புக்கள் கலந்து கொண்டனர்.